**தலைப்பு 222 – இலங்கை தரைப்படை**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 222 - இலங்கை தரைப்படையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை தரைப்படையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

2018 தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுலப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மூலதன செலவுகள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மூலதனச் லெவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் ரூபா 3,423.04 மில்லியன் தொகையான மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் சுவீகரித்தல் செலவுகளை நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) ரூபா 420.62 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப தவறினால் 2022 ஆம் ஆண்டின் போது இறுதியில் கணக்கீடு செய்வதற்கு முடியாத மீதியினை 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதனச் செலவுகளை சரியாக கக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் மூலதன விடயங்கள் 18 இன் முடிவுறாத வேலை மீதியானது ரூபா 1.81 பில்லியனால் அதிகரித்து நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு வழங்கிய தகவல்கள் பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதனச் செலவுகளையும் முடிவுறாத வேலைகளையும் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (iii) | முன்னைய ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக காணப்பட்ட நிர்மாணங்கள்/ நவீனமாக்குதல்களின் ஒரு பகுதியினை உள்ளடக்கி மீளாய்வாண்டில் வேலைகள் முடிவுறுத்தப்பட்ட பெறுமதி ரூபா 467.3 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் இப்பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | அதனை அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | உரிய பெறுமதிகள் மூலதனமாக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டில் தரைப்படையின் 334 வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவும் 91 அலுவலக உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்களும், மற்றும் 26 பாரமான இயந்திர உபகரணங்களும் கைதவிர்ப்புச் செய்து ரூபா 289.91 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அச்சொத்துக்களிலிருந்து நீக்கப்படவில்லை. | ஆதனப் பதிவேட்டிலிருந்து நீக்கி அவை தொடர்பான விபரங்களையும் நாட்குறிப்பு பதிவுகளையும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்காக துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சொத்துக்களின் கிரயத்தை கணக்குகளிலிருந்து நீக்குதல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) தரைப்படையின் 15 | உரிய சொத்துக்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தரைப்படையின் காணிகளையும் கட்டிடங்களையும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | காணித்துண்டுகளும் தரைப்படை பயன்படுத்தி வருகின்ற 330 காணித்துண்டுகளுக்குமுரிய 10,240 ஏக்கர் காணிகள் மற்றும் ரூபா 80.67 பில்லியன் பெறுமதியான கட்டிடங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் இதனால் இச்சொத்துக்களின் பெறுமதி மீளாய்வண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | நீண்டகாலமாக பயன்படுத்திவருகின்ற இச்சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) உள்ளடக்கப்பட்ட 28 வகையான சொத்துக்களின் கடந்த ஆண்டிற்கான இறுதி மீதியானது மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாக ரூபா 182.82 மில்லியன் குறைத்து முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டிற்கான இறுதி மீதியில் உள்ளடக்கப்படாத பெறுமதிகளை கணக்கீடு செய்ததன் பின்னர் இவ்வித்தியாசம் உருவாகியுள்ளது. | உரிய தரவுகளை ஒப்பீடு செய்யாமைக்கான காரணம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (iii) | கணக்காய்விற்குச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்த நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) மீளாய்வாண்டின் மீதி ரூபா 5.79 பில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் அதனை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதியை இனங்கண்டு துரிதமாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (iv) | ரூபா 3 மில்லியன் பெறுமதியான இரண்டு குதிரைகள் பாகிஸ்தான் அரசாங்கத்தின் அன்பளிப்பாக கிடைத்திருந்தும் அவைகள் தரைப்படையினால் பொருள் இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது இந்த இரண்டு குதிரைகளும் மரணமடைந்ததனாலான | அலுவலக தாமதத் தவறினால் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காததனால் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் உரிய குதிரைகளையும் நாயினையும் பொருள் இருப்பு பதிவேட்டில் பதிந்து கணக்குகளில் உள்ளடக்கி உரிய மரணமடைதல் சம்பந்தமான இல்லாமல் போதல் மற்றும் நட்டங்கள் சேதங்கள் நடைமுறைக்கு | சொத்துக்கள் அன்பளிப்பாகக் கிடைக்கும் போதும் அவற்றிற்கு நட்டங்கள் ஏற்படும் போதும் சரியாக கணக்கீடு செய்து நிதிக்கூற்றுக்களின் மூலம் காட்டப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| நட்டத்தை நட்டங்கள் மற்றும் சேதங்களாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அல்லது கணக்குகளில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் போது தரைப்படையின் பெறுமதி வெளிப்படுத்தப்படாத ஒரு நாயும் மரணமடைந்திருந்ததுடன் அந்த நிலைமையையும் நட்டங்கள் சேதங்களாக அறிக்கையிடப்படவில்லை அல்லது கணக்குகளில் செம்மையாக்கப்படவில்லை. | இணங்க தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தரைப்படைக்குச் சொந்தமான மற்றும் தரைப்படையினால் நீண்டகாலமாக பயன்படுத்தி வந்த 15 காணித்துண்டுகளும் ரூபா 35.09 பில்லியன் பெறுமதியான 2,163 கட்டிடங்களும் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அல்லது நி.பி 502(2) இன் II ஆவது அத்தியாயத்திற்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடு 2022 திசெம்ர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுத் தீணைக்களத்தினால் மதிப்பீடு செய்ததன் பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### (ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் (ஏசீஏ-6) சொத்துக்கள் தொகுதி 05 இற்குரிய 29 வகையான சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கு மேற்கொள்ளப்பட்ட சேர்த்துக்கொள்ளல்களாக ரூபா 17.04 பில்லியன் காட்டப்பட்டிருந்ததுடன் இப்பெறுமதி கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் அத்திகதியில் காணப்பட வேண்டிய ஆரம்ப மீதியில் உள்ளடக்கப்படாத பெறுமதியை இனங்கண்டதன் பின்னர் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | உரிய வித்தியாசத்தை நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்து நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 222-01-03-005-2509 ஆம் இலக்க பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்தை தவிர்ப்பதற்கான செயற்திட்டத்திற்காக (இலங்கை-இந்தியா) வழங்கப்பட்டிருந்த ரூபா 205 மில்லியன் மொத்த தொகையான தேறிய நிதி ஏற்பாடானது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் உருவாகிய பொருளாதார சிக்கலை முன்னிட்டு வெளிநாட்டு கடன் அடிப்படையில் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட பெறுகைகளை கைவிடுதலில் அடிப்படையில் இச்சேமிப்பு உருவாகியிருந்தது. | மதிப்பீட்டினை முடியுமான அளவு சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அரசாங்க கடன்களின் கிரயத்தை கவனித்துப் பார்த்தல் வேண்டும். |
| (ஆ) | 22 மீண்டுவரும் செலவு விடயங்களுக்கான மொத்தமாக ரூபா 40.87 பில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் மொத்தமாக ரூபா 11.22 பில்லியன் நிதி ஏற்பாடும் 8 மூலதன செலவு விடயங்களுக்கான மொத்தமாக ரூபா 1.76 பில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் மொத்தமாக | நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கலினை முன்னிட்டு விலைப் பட்டியல்களைத் தீர்த்துவைப்பதற்காக போதியளவு பணம் கிடைக்காமை, பொருட்கள் | மதிப்பீட்டினை முடியுமான அளவிற்கு சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 419.94 மில்லியன் நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த சேமிப்புக்களின் அளவானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 6 சதவீதத்திலிருந்து 88 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் காணப்பட்டது. | தட்டுப்படாக இருத்தல் மற்றும் வெளிநாட்டு நாணயத்தின் தட்டுப்பாட்டின் அடிப்படையில் இச்சேமிப்புக்கள் உருவாகியிருந்தன. | |
| (இ) | ஐந்து மீண்டுவரும் செலவு விடயங்களுக்கும் மூன்று மீண்டுவரும் செலவு விடயங்களுக்கும் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்ப்பாடு போதியதாக இல்லாமையால் நி.பி 66 இன் கீழ் முறையே ரூபா 4.61 பில்லியன் மற்றும் ரூபா 145.5 மில்லியன் ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் இரண்டு மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 9.64 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாடும் வழங்கப்பட்டிருந்தது. | பொருளாதார சிக்கலினை முன்னிட்டு சில செலவு விடயங்களுக்கு நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமையும் இன்னும் செலவு விடயங்களின் நிதி ஏற்பாடு சேமிக்கப்படுதல் மற்றும் திரவத்தன்மையான பணம் கிடைக்காமையினாலும் இந்நிலைமை உருவாகியுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | இருபத்தேழு செலவு விடயங்களுக்கான மொத்த தேறிய நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனால் அதனை மிகைத்து ஆண்டின் இறுதியில் ரூபா 9.81 பில்லியன் பொறுப்புக்களுக்காக கடப்பாடு செய்யப்பட்டிருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | 222-01-02-1203 ஆம் இலக்க செலவு விடயத்திற்கு (உணவும் சீருடையும்) வழங்கிய மொத்தமாக ரூபா 9 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டில் ஆண்டின் இறுதியில் 99 சதவீதம் அதாவது 8.91 பில்லியனும் இரண்டு மூலதனச் செலவு விடயங்களுக்காக ஏனைய செலவு விடயங்களிலிருந்து நி.பி 66 இன் கீழ் மாற்றம் செய்யப்பட்டிருந்த ரூபா 37.83 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 32 சதவீதம் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. | பொருளாதார சிக்கலினை முன்னிட்டு போதியளவு பணம் கிடைக்காமையின் அடிப்படையில் இந்த நிலைமை உருவாகியுள்ளது. | –மேற்படி- |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) மற்றும் 214 இன் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் ஒரு மாத காலத்தினுள் தீர்த்துவைக்க முடியாதிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 12 பில்லியனாகும். | தற்பொழுது அந்த விலைப்பட்டியல்கள் தீர்த்துவைக்கப்பட்டு வருகின்றன. | பொறுப்புக்களை துரிதமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட 67 நிறுவனங்களின் மாதிரிகளிலிருந்து மீதிகளில் உறுதிப்படுத்தல்கள் கேரப்பட்டிருந்ததுடன் 30 நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 5.36 பில்லியன் பொறுப்புக்கள் அந்த நிறுவனங்களால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் உறுதிப்படுத்தல்களை வழங்கிய 3 நிறுவனங்கள் மீதிகளுடன் இணங்கி இருக்காததுடன் 16 நிறுவனங்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பொறுப்புக்களின் அளவினை விட மொத்தமாக ரூபா 2.22 பில்லியன் குறைத்தும் 18 நிறுவனங்கள் மொத்தமாக ரூபா 1.57 பில்லியன் அதிகரித்தும் அறிக்கையிட்டிருந்தன. | ஒவ்வொரு செலவு விடயங்களையும் கட்டுப்படுத்துகின்ற தரைப்படையின் பணிப்பாளர் சபையினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விலைப்பட்டியல்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | மீதிகளுக்கிடையிலான வித்தியாசங்களுக்கான காரணங்களை உறுதியாகக் கண்டுபிடித்து சரி செய்தல் துரிதமாக செய்யப்படுதல் வேண்டும். |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி எற்பாட்டினை பயன்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு 07 செலவு விடயங்கள் தொடர்பாக 15 பல்வேறு செயற்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 1,152.83 மில்லியன் மூலதன நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 634.16 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அச்சேமிப்புக்களின் சதவீதமானது 8 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் இருந்தது. மீளாய்வாண்டில் மொத்தமாக ரூபா 58.63 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த லக்கல மற்றும் கஜ சிங்ஹபுர நுழைவு வீதிகளை மற்றும் மீமுரே ஆரம்ப பாடசாலை கட்டிடத்தின் வேலைகளை பூர்த்தி செய்யும் சதவீதம் முறையே 5, 15 மற்றும் 20 சதவீதங்களாக ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. மேலும் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சிடமிருந்து கிராமங்களுடன் சினேகபூர்வம் நிகழ்ச்சித்திட்டங்களின் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான இயந்திரங்களை பராமரிக்கும் செலவுகளை மேற்கொள்வதற்காக ரூபா 10.64 மில்லியன் நிதி ஏற்பாடு கிடைத்திருந்ததுடன் அச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படாது ஆண்டின் இறுதியில் நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தமை மற்றும் பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரித்ததன் அடிப்படையில் நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமையினால் இந்நிலைமை உருவாகியுள்ளது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி ஏற்பாட்டினை சிறந்த மட்டத்தில் பயன்படுத்துதல் வேண்டும். |

**(ஆ) கிராமசக்தி மக்கள் தொழில் முறச்சியின் கீழ் எல்லங்கா குளத்தை மறுசீரமைப்புச் செய்யும் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம்.**

2018 ஆம் ஆண்டில் மேன்மை தாங்கிய சனாதிபதி அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் சனாதிபதி செயலாளர் அலுவலகத்தினால் அநுராதபுரம் மாவட்டத்தில் 11 குளங்களை ரூபா 113 மில்லியன் செலவில் குளக்கட்டுக்கள், குளிக்கும் துறைகள், மூட்டுச் சுவர்கள், நுழைவு வீதிகள் நிர்மாணித்தல் பிரதான விவசாய விதிகளை நவீனமயப்படுத்துதல், வான் கதவுகளை நிர்மாணித்தல், பெயர்ப்பலகைகளை தயாரித்தல் போன்ற வேலைகள் தரைப்படைக்கு ஒப்படைக்கப்பட்டு ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | நுனமடலாவ, நெம்படகஸ்திகிலிய, கலஹிடியாவ, ஹெலம்ப ஆகிய நான்கு குளங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் சதவீதம் 70 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையாக இருந்ததுடன் இக்குளங்களில் சில அத்தியவசியமான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்காததனாலும் பெரிய அளவிலான கருங்கற்களை உள்ளடக்கிய நிர்மாணப் பொருட்கள் குளச் சுற்றாடலில் குவிக்கப்பட்டிருந்ததனாலும் குளத்தைப் பயன்படுத்தும் கிராமிய மக்கள் சிரமத்திற்கு உள்ளகியிருந்தனர். | உரிய குளங்களை மறுசீரமைப்புச் செய்யும் செயற்பாடுகள் நிதி ஏற்பாடுகளை அங்கீகரிக்காமையின் காரணமாக கைவிட வேண்டி ஏற்பட்டதுடன் பல செயற்பாடுகள் முடிவடைந்துள்ளன. | மதிப்பீடு செய்யப்பட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டியதுடன் மக்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் தெடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (ii) | தரைப்படையின் வேண்டுதலின் அடிப்படையில் சனாதிபதி அலுவலகத்தின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 28.01 மில்லியன் செலவு செய்து 10 உழவு இயந்திர | உரிய சொத்துக்கள் சனாதிபதி செயலகத்தின் அங்கீகாரத்திற்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு செயற்திட்டத்தின் | உரிய செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக |

| | | | |
|---|---|---|---|
| | ரங்கள், 05 மோட்டார் சைக்கள்கள், 05 லெப்டொப் கணனிகள், ஒரு போட்டோ பிரதி பண்ணும் இயந்திரம், 05 LED தொலைக்காட்சி இயந்திரங்கள் 03 புல் வெட்டும் இயந்திரங்கள், 03 Chainsaw இயந்திரங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த அலுவலகமும் இயந்திர உபகரணங்களும் உரிய செயற்திட்டத்திற்கு நேரடியாக பங்களிப்பு செய்யப்பட்டதா என்பதனை வெளிப்படுத்த முடியாதிருந்தது. மேலும் குளங்களை நிர்மாணிக்கும் மதிப்பீடுகளில் குறிப்பிடப்படாது தொடக்க விழாவிற்காக ரூபா 1.84 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய குளங்களை மறுசீரமைப்புச் செய்வதற்கு அத்தவசியமானது எனக் குறிப்பிட்டு தரைப்படையின் பாரவாகனங்களையும் பாரமான இயந்திரங்களையும் திருத்தம் செய்வதற்காக ரூபா 3.8 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. | செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தொடக்க விழாவினை தரைப்படை நிறைவேற்ற வேண்டும் என சனாதிபதி அலுவலகத்தினால் தரைப்படைக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள இயந்திரங்கள்/ வாகனங்களை திருத்தம் செய்து கொள்ள வேண்டி இருந்தது. | இல்லாத பின்னணியில் செயற்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்ட செலவுகளுக்கு மாத்திரம் செலவு செய்து செயற்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | இச் செயற்திட்டத்தின் தொடக்க மதிப்பீட்டிற்கு இணங்க தரைப்படையினால் 50 கிலோகிராம் நிறையுள்ள 2802 மூடை சீமெந்து அநுராதபுர மாவட்ட செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு அவற்றில் ரூபா 1.6 மில்லியன் பெறுமதியான 1482 மூடை சீமெந்து இச்செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்கு நேரடியாக தொடர்புபடாத தரைப்படை முகாம்களின் பல்வேறு நிர்மாணங்களுக்காக பயன்படுததப்பட்டிருந்தன. | 393 சீமெந்து மூடைகள் செய்றதிட்டத்தின் உதவி நர்மாணங்களுக்காகவும் 218 சீமந்து மூடைகள் செயற்திட்டம் தாமதத்தினால் பொருத்தமற்ற நிலைக்கு மாறியிருந்தது எனவும் மிகுதி அனைத்தும் செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டன எனவும் தெரிவிக்கிறேன். | உரிய செயற்திட்டத்திற்காக வழங்கிய வளங்களை சிக்கனமாக பயன்படுத்தி செயற்திட்டத்தினை வெற்றிபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ரூபா 1.54 மில்லியன் செலவு செய்து 400 கியூப் மீற்றர் கருங்கற்கள் நம்படகஸதிகிலிய குளத்தின் முதலீட்டுச் சுவர்களை நிர்மாணிப்பதற்காக தரைபபடையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 50 கியூப் மீற்றர்களுக்கு மேற்பட்ட அளவானவை அக்குளத்தின் சுற்றாடலில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் பின்னர் நிதி ஏற்பாடு வழங்கப்படாததன் காரணமாக நிர்மாணச் செயற்பாடுகளை முடிவுறுத்த முடியாதிருந்தது. | உரிய செயற்திட்டத்திற்காக கொண்டு வரப்பட்ட கருங்கற்களை செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 2.4 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு ஆண்டினை மிகைத்து 31 ஆண்டுகள் வரையான கால வீச்சில் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள 3,314 இராணுவ உத்தியோகத்தர்களிடமிருந்தும் 444 சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்தும் மொத்தமாக ரூபா 43.23 மில்லியன் இடர் விழா மற்றும் விசேட முற்பணக் கடன் மீதிகள் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இக்கடன் மீதிகளில் ரூபா 13.95 மில்லியன் 10 ஆண்டுகளை மிகைத்திருந்தன. | இக்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இக்கடன் மீதிகள் துரிதமாக அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஓய்வுபெற்ற 182 இராணுவ வீரர்களிடமிருந்தும் 68 சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஒரு ஆண்டினை மிகைத்து 17 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது அறவிடப்படாத கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 14.78 மில்லியனாக இருந்ததுடன் இக்கடன் மீதிகளில் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 3.04 மில்லியன் 5 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதிகளாக இருந்த போதிலும் தாபன விதிக்கோரைவயின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இக்கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | 2021 ஆம் ஆண்டில் தரைப்படையின் 05 வாகனங்களுக்க விபத்துக்களால் ஏற்பட்ட ரூபா 5.86 மில்லியன் நட்டங்கள் சம்பந்தமான பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை திருத்தம் செய்யும் பெறுமதியை தொடக்க விசாரணை சபை வழங்கும் வரை இந்த அறிக்கையை வழங்க முடியாதுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பாரத்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 06 செலவு விடயங்களுக்காக நூறு சதவீதம் | திரவத்தன்மைப் பணம் கிடைக்காமையின் | இலக்கிடப்பட்ட திட்டத்தினை |

| | | |
|---|---|---|
| இலக்கிடப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றம் காட்டப்பட்டிருந்தும் பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்திற்கும் 74 சதவீதத்திற்கும் இடையே மற்றும் 75 சதவீதத்திற்கும் 89 சதவீத்திற்குமிடையே 03 நிகழ்ச்சித்திட்டங்கள் வீதம் காணப்பட்டன. | அடிப்படையில் அச்செயற்திட்டங்களுக் காக தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதியுடன் அதன் செயலாற்றல் 86 சதவீத்திலிருந்து 100 சதவீதம் வரையான அளவுடையதாகும். | அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மூன்று ஆண்டுகளுக்கான எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளுக்காக பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்காக ரூபா 47.45 பில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்துடன் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் அலகுகளின் எண்ணிக்கை காட்டப்பட்டிருக்கவில்லை. | மூன்று ஆண்டுகளுக்கான பெறுகைத் திட்டத்தினை தயாரிப்பதற்காக எதிர்காலத்தில் கொள்வனவு செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கையை விபரமான பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க திட்டங்களை தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்கான மட்டுப்படுத்தப்பட்ட/ துணையான கேள்வி போட்டி முறைமை, தேசிய போட்டி கேள்வி முறைமை மற்றும் விலை குறிப்படல் முறைமையை பின்பற்றி மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 886.76 மில்லியன் தொகையான பெறுகைகள் சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட பொது விடயங்கள் கீழ்ழே தரப்படுகின்றன. | | |
| (i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி 3.3 இல் குறிப்பிட்ட வரையறைகள் தொடர்பாக கவனம் செலுத்தாது ரூபா | இராணுவத்திற்கு பாரம்பரியமான சிக்கலான நிலைமையின் கீழும் பெறுகைகளை | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மிகவும் பொருத்தமான பெறுகை முறைமை தெரிவுசெய்யப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | 692.82 மில்லியன் பெறுகைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட/ துணையான தேசிய போட்டி கேள்வி முறைமை பயன்படுத்தப்பட்டிருந்தது. | தடையின்றி மேற்கொள்வதற்காக இப்பெறுகை நடைமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ii) | சில கொள்வனவுகளின் போது ஒவ்வொரு வழங்கல் பொருளுக்கும் அதிக அளவிலான வழங்குனர்கள் பதிவுசெய்திருந்தும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவான வழங்குனர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் இந்த விலைமனு வழங்கியர்களை தெரிவுசெய்த அடிப்படையும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை காட்டப்பட்டிருக்கவில்லை. | கேள்வி மனுதாரர்களை தெரிவு செய்த அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடம் இருப்பு காணப்படுகின்றதா என்பதனை உறுதியாக ஆராய்ந்து பார்க்காது விலை மனுக்கள் கோரப்பட்டதனால் 200 இற்கு மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தும் கிடைத்திருந்த விலை மனுக்களின் எண்ணிக்கை 10 இற்கு குறைந்த அளவில் காணப்பட்டதுடன் விலை மனுக்கோரல் ஆவணம் விலைமனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டது என்பதற்கான தபால் பற்றுச்சீட்டு அல்லது இலத்திரனியல் தகவலின் உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இருப்பு காணப்படுகின்றதா என்பதனை பரீட்சித்தல் மேற்கொள்ளப்படாததுடன் விலைமனுக் கோருவதற்கு முன்னர் உரிய நிறுவனத்துடன் எந்த தொடர்பும் பேணப்படுவதில்லை. | கேள்வி மனுக் கோரலின் மாற்றுமுறைமையை ஆராய்ந்து பார்ப்பதற்கும் உரிய தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) ஒவ்வொரு பெறுகைகள் சம்பந்தமாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | ரூபா 132.45 மில்லியன் செலவில் தரைப்படையின் உத்தியோகத்தர்கள்/ படைவீரர்கள் அணிகின்ற தரைப்படை இலச்சினையை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட 165,100 பெயர்ப்பலகைகளை கொள்வனவு செய்யும் போது வருடாந்த பெறுகைத் திட்டம் 28 சதவீதத்தினால் மிகைத்திருந்ததுடன் பொருள் விபரக் குறிப்பு ஆவணத்தை குறைபாடுகளுடன் தயாரித்திருந்ததனால் பெறுகை நடவடிக்கைகள் தாமதித்து பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததனால் இராணுவத் தளபதியின் கட்டளைக்கு இணங்க 73 ஆவது சுதந்திரதின ஊர்வலத்திற்கு இப்பெயர்ப் பலகையை அணிவதற்கு முடியாதிருந்தது. மேலும் ஆளணிக் கட்டுப்பாட்டு பணிப்பாளர் சபையின் சிபாரிசுகள் மற்றும் குறைந்த விலை குறிப்பிட்ட கேள்வி மனுதாரரின் வேண்டுதலினை கவனத்தில் கொள்ளாது ரூபா 51.078 மில்லியனுக்கு மேற்பட்ட செலவினை மேற்கொண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர் கட்டளையிடப்பட்டதில் 30 சதவீத்தினை வழங்கி மிகுதியை ரூபா 34.21 மில்லியன் விலையை சேகரித்து வழங்குவதற்கு செய்த பிரேரணைக்கு | ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை, கொவிட் -19 தொற்று நோய் நிலைமை காரணமாக விமானப் பயணம் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற நிலைமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததுடன் வழங்கிய பொருட்களின் மாதிரியை பெறுகைக்குழு அங்கீகரித்துள்ளது. மீண்டும் விலை மனுவை கோரும் போது விலைகள் அதிகரிப்பதற்கான சாத்தியமும் காலமும் தொடர்பாக கவனித்துப் பார்த்து பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிறைவேற்றத் தவறிய வழங்குனர்கள் சம்பந்தமாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் திட்டமிட்ட குறிக்கோள்களுக்காக பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் மற்றும் உயர்ந்த தரத்துடனான குறைந்த செலவினை மேற்கொண்டு அரசாங்கத்திற்கு உச்ச அளவு பொருளாதார நலன்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தரைப்படை இணக்கம் தெரிவித்திருந்தது. | | |
| (ii) | ரூபா 83 மில்லியன் செலவில் முகாம் பாதுகாப்பிற்காக Chain Link Mesh (G-10) 810 ரோல்களை கொள்வனவு செய்யும் போது குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த தகமையுள்ள கேள்விதாரர் கேள்வி ஆவணங்களின் மூலம் காசு அடிப்படையில் மாத்திரம் பொருட்களை வழங்க முடீயும் என தெரிவித்திருந்ததுடன் இக்கேள்விதாரர் ஒரு பதிவு செய்த வழங்குனர் என்பதனால் சுவரை இணங்கச் செய்வதற்கு நியாயமான முயற்சிகள் எடுக்காது மேலதிகமாக ரூபா 29.73 மில்லியனை மிகையாக செலுத்தி செல்லுபடியான SLS தரச் சான்றிதழும் இல்லாத பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | நாட்டில் காணப்பட்ட பணவீக்க நிலைமையில் பணத்திற்கு மத்திரம் பொருட்களை வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளல் மற்றும் செல்லுபடியாகும் கால எல்லையை 30 நாட்களுக்கு மட்டுப்படுத்தியதனால் கேள்வி மனுதாரரிடம் மீண்டும் விசாரித்தல் நடைமுறைச் சாத்தியமற்றது. ஏற்றுக்கொள்ளப்பட்ட வியாபாரப் பெயருடன் பிரபல்யமான வியாபாரக் குறியைக் கொண்ட பொருட்கள் வழங்கப்பட்டன. | அரசாங்க கொடுப்பனவு நடைமுறை தொடர்பான அறிவுள்ள வழங்குனர்களுடன் நம்பகத்தன்மையுடன் நடவடிக்கை எடுத்து உச்ச அளவு பொருளாதார நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ரூபா 71.27 மில்லியன் செலவு செய்து மெனிங்டவுன் திருமணமான உத்தியோகத்தர் வீட்டுத் தொகுத்திக்காக இரும்புக் கம்பிகளை கொள்வனவு செய்யும் போது பெறுகைத் தீர்மானத்தினை வழங்குவதற்கு 4 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதித்ததனால் விலைமனு செல்லுபடியாகும் காலத்தை மிகைத்ததன் காரணமாக தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் உரிய இரும்பு இருப்பினை இணங்கிக்கொண்ட விலைக்கு வழங்குவதற்கு மறுத்ததனால் மீண்டும் விலை மனுக்களை கோரி | காணப்பட்ட பொருளாதார சிக்கல் மற்றும் வெளிநாட்டு நாணய மாற்று வீதம் எதிர்பாராத வகையில் அதிகரித்ததனால் உரிய வழங்குனருக்கு முறையான பெறுகை நடைமுறைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து உரிய வழங்கலினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. உரிய செயற்திட்டம் நிறைவேற்றப்படுகின்ற சேவை நிலையத்திடமிருந்து சேவைக்கு உள்ள தேவைப்பாட்டிற்கு | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் உச்ச அளவு பொருளாதார நலன்களை வழங்கக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றத் தவறிய வழங்குனர் மற்றும் இன்னும் இரண்டு வழங்குனர்களிடமிருந்து 123 சதவீத அதாவது ரூபா 28.3 மில்லியன் உயர்ந்த விலையின் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்ததுடன் இரண்டு சந்தர்ப்பங்களில் 8.9.1 (ஆ) பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் வழங்குனர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளபப்பட்டிருக்கவில்லை . மேலும் ஒரே தடவையில் கொள்வனவு செய்யும் போது பெற்றுக்கொள்ளக்கூடியதாக விருந்த கழிவு நலன்கள் தொடர்பாக கவனம் செலுத்தாது மூன்று சந்தர்ப்பங்களின் போது உரிய இரும்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | இணங்க கொள்வனவு செய்யப்பட்டது. | |
| (iv) | தரைப்படையின் மருத்துவ நடவடிக்கைகளை மிகவும் செயற்திறனாகவும் உயர்ந்த வகையிலும் பேணுவதற்காகவும் நாட்டில் இடம்பெறுகின்ற இயற்கை அழிவுகள், தொற்றுநோய் மற்றும் விசேட பாதுகாப்பு கடமைகளின் போது மக்களுக்கும் மருத்துவ சேவைகளை முறைப்படியாக நிறைவேற்றுவதற்காகவும் ரூபா 38.51 மில்லியன் செலவு செய்து நடமாடும் மருத்துவ பரிசோதனை அறை மற்றும் பாமசியுடனான ஒரு பஸ் வண்டியும் நடமாடும் ஆய்வுகூட வசதிகளுடனான ஒரு பஸ் வண்டியையும் கொள்வனவு செய்து 2022 மே மாதத்தில் தரைப்படை வைத்தியசாலைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தும் இந்த இரண்டு பஸ்களிலிருந்தும் சிகிச்சை | எதிர்காலத்தில் இரண்டு பஸ்களையும் மிகவும் வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தொற்றுநொய் நிலைமையின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்ததனால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் அடிப்படையில் மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்துள்ளது. உரிய கொள்வனவுகளுக்காக ஒன்றுக்கொன்று வித்தியாசமான 02 பொருள் விபரக் குறிப்புக்கள் பயன்படுத்தப்படுவதனால் பெறுகைகள் | பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் கொள்வனவு செய்யப்பட்ட இச்சொத்துக்களை கொள்வனவு செய்த குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக பயன்படுத்த வேண்டும். மதிப்பீடுகளுக்கு இணங்க அரசாங்கத்திற்கு உச்ச அளவு பொருளாதார நலன்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை 805 ஆகவும் பரிசோதனைக்காக ஈடுபடுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை 03 ஆகவும் இருந்ததனால் மீளாய்வாண்டில் உரிய பஸ்களின் பயன்பாடு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும் தேசிய பாதீட்டுத் திணைக்களம் ரூபா 12.58 மில்லியனுக்கு இந்த பஸ்ஸை கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரத்தினை வழங்கியிருந்தும் இந்நிதி மட்டுப்பாடுகள் 206 சதவீதத்தினால் மிகைத்திருந்ததுடன் 5.3.1 (ஈ) பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு முரணாக கேள்வி மனு கோரி 06 மாதங்களுக்குப் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒரே காலப்பகுதியில் ஒரே நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக விருந்த விலை மற்றும் கழிவு நலன்களைப் பற்றி கவனத்தில் கொள்ளாது இரண்டு பெறுகைகளாக அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. | இரண்டாக அமுல்ப்படுத்தப்பட்டன. | |
| (v) | நறஹேன்பிட தரைப்படை வைத்தியசாலையின் 15 மாடிக் கட்டிடம் மற்றும் அங்குறவெல்பெலஸ்ஸ வெடி பொருள் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான தயார்படுத்தப்பட்ட கொங்கிரீட் பல்வேறு தேவைகளுக்கான கட்டிடப் பொருட்கள் மற்றும் ஹபரகட மத்திய | சட்டரீதியான நடவடிக்கை ஒப்பந்தக்காரருக்கு எதிராக எடுக்க முடியாது | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியல் சேவை வேலைத் தளத்திற்குத் தேவையான திருத்தம் செய்தல் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது கட்டளையிடப்பட்ட மொத்தமாக ரூபா 367.59 மில்லியன் பொருட்களில் பெறுகை வழிகாட்டிகள் 5.3.11, 5.4.10 மற்றும் 8.9.1 இன் பிரகாரம் கேள்விப் பாதுகாப்பு செயலாற்றல் பிணைமுறி, என்பன உடன்படிக்கை செய்து கொள்ளப்படாது மேற்கொள்ளப்பட்டதனால் 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை பல்வேறு சந்தர்ப்பங்களில் கட்டளையிடப்பட்ட ரூபா 126.95 மில்லியன் பெறுமதியான கொங்கிரீட் ரூபா 5.21 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள் ரூபா 3.3 மில்லியன் பெறுமதியான நிர்மாணப் பொருட்கள் என்பன வழங்குனரினால் வழங்கப்படாதிருந்தும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | | |
| (vi) | ரூபா 70.47 மில்லியன் செலவு செய்து விமான புலம்பெயர் படையணிக்காக 4,500 Uniform Rib Stop Olive Green Kit களை கொள்வனவு செய்யும் போது உரிய சீருடையானது நுற்றுக்கு நூறு வீதம் Cotton மூலப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட புடவைகள் உள்ளடங்கியிருக்க வேண்டுமென பொருள் விபரக் குறிப்பு ஆவணத்தில் காட்டப்பட்டிருந்ததுடன் கேள்வி ஆவணங்களை எடுத்துச்சென்ற மூன்று | 2020 ஆம் ஆண்டின் பின்னர் சீருடைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மட்டுப்படுத்தப்பட்டிருந் ததன் காரணமாக தேவைப்பாட்டின் முன்னுரிமையின் அடிப்படையில் வெளிக்கள பரீட்சிப்பின் பின்னர் சுதந்திர தின விழா ஊர்வலத்திற்காக கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு, பொருள் விபரக் குறிப்பிற்கு மற்றும் சிறந்த கட்டுப்பாட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும் தகமையுள்ள அக்கறையினைக் காட்டும் தரப்பினர்களுக்கு பெறுகைகளில் பங்குபற்றுவதற்காக நியாயமான சமமான மற்றும் உச்ச அளவு வாய்ப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

கேள்விதாரர்களில் ஒரு நபர் மாத்திரம் கேள்வி மனுவைச் சமர்ப்பித்திருந்தார். விலை மனுக்களைச் சமர்ப்பித்த கேள்விதாரர் 45 சதவீதம் Polyester 55 சதவீதம் Cotton வகையான புடவைகளில் தயாரித்த சீருடைகளை வழங்கலாம் என விலை மனுக்களில் தெரிவித்து அனுப்பியிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அதற்கு இணங்கி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்நிலைமையானது விலைப் போட்டியினை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலாக அவதானிக்கப்பட்டது. மேலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசாக இருந்ததானது வழங்குனரின் மாதிரி தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்புடன் இணங்கியிருக்கவில்லை என்பதாக இருந்த போதிலும் வெளிக்கள பரிசோதனை பெறுபேற்றின் அடிப்படையில் அச்சிபாரிசு பின்னர் மாற்றப்பட்டிருந்ததுடன் இச்சீருடை தொகுதியின் தொப்பியும் பொருத்தமற்றது என விமான புலம்பெயர் படையணிக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 02 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 60.09 மில்லியன் பெறுமதியான சீருடை இருப்புக்களின் நிறமும் தரைப்படைக்கு கொள்வனவு செய்வதற்க இணங்கிக் கொண்ட நிறத்தினைவிட மாற்றமாக வழங்கப்பட்டிருந்தது என தரப் பாதுகாப்பு மற்றும் பரீட்சிப்புக்கள் பணிப்பாளர்

| | | | |
|---|---|---|---|
| | சபை தெரிந்திருந்தும் அந்நிலைமை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (vii) | ரூபா 50.36 மில்லியன் செலவு செய்து தரைப்படையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு 1600 எண்ணிக்கையான Cap Peak Brown Chin Trap Gold and Silver Button கொள்வனவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்பு ஆவணத்தில் தேவைக்கேற்றவாறு போதியளவு விபரிக்கப்பட்டிருக்காததுடன் பின்னர் கேள்வி மதிப்பீட்டின் போது பிரதான விடயத்திற்குரிய விடயங்கள் தொடர்பான நிர்ணயிக்கப்பட்ட பொருள் விபரக்குறிப்பு பயன்படுத்தப்பட்டு மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.7 ஆம் வழிகாட்டியிலுள்ள ஏற்பாடுகளை மீறி கேள்வி மதிப்பீடானது நியாயத்தன்மை இன்றி இடம்பெற்றதனால் ரூபா 13.04 மில்லியன் மிகையாக செலவு செய்து உரிய சீருடை விடயங்களை கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | இப்பெறுகை மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பொருள் விபரக் குறிப்பில் நிறம் காட்டப்பட்டிருக்காததுடன் தற்பொழுது அந்த அவதானிப்பு இணைக்கத்திற்கு கொண்டுவரப்பட்டு பொருள் விபரக் குறிப்பு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது | பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தரைப்படையின் தேவைப்பாட்டிற்குப் பொருந்துகின்ற தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (viii) | ரூபா 22.52 மில்லியன் செலவு செய்து தியத்தலாவ – 17 ஆவது பொறியியல் சேவை ரெஜிமென்டினால் 21 சந்தர்ப்பங்களின் போது கட்டிட பொருட்களை கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 | அரசாங்கத்தின் பெறுமதி சேர் வரிப் பெறுமதியை சேர்த்ததன் காரணமாக ரூபா ஒரு மில்லியன் மிகைத்திருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழிகாட்டியின் பிரகாரம் விதிக்கப்பட்டிருந்த உச்ச அளவு நிதி எல்லையை மிகைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ix) | ரூபா 22.2 மில்லியன் செலவு செய்து கொம்பனி வீதி மின்சார மற்றும் இயந்திர பொறியியல் ஆரம்ப வேலைத்தளத்திற்காக வாகன உதிரிப் பாகங்களும் பனாகொட I ஆவது பொறியியல் சேவை ரெஜிமென்டுக்கு தேவையான நிர்மாணப் பொருட்களையும் கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி மனுக்களை சமர்ப்பிப்பதற்காக வழங்க வேண்டிய ஆகக் குறைந்த கால எல்லை வழங்கப்படவில்லை. | பாதுகாப்பு பிரிவின் வாகனங்களை துரிதமாக திருத்தம் செய்யும் போது இந்த நிலைமை உருவாகியுள்ளது. நிர்மாணப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது தாமதத் தவறினால் கேள்வி மனுவைக் கோரும் ஆரம்பத் திகதி பிழையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (x) | ரூபா 17.14 மில்லியன் செலவு செய்து மேஜர் ஜேனரால், பிரிகேடியர் மற்றும் கேர்னல் பதவிகளுக்கான 450 சீருடைத் தொகுதிகளையும் 25,000 மீற்றர் புடவைகளையும் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பானது குறுகிய முறைமையில் விபரிக்கப்பட்டிருந்ததனால் வழங்குனர்கள் பல சந்தர்ப்பங்களில் பதிலளித்திருக்காததுடன் பின்னர் தரைப்படை வழங்கிய சில விபரக் குறிப்புக்களுக்கு இணங்கி இருக்காத சீருடைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் | அனைத்து உத்தியோகபூர்வ இலச்சினைகள் மற்றும் புடவைகளுக்காக எதிர்காலத்தில் நிறக்குறியீட்டுடன் பொருள் விபரக் குறிப்பு நாளதுவரையாக்கப்படுவதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வெளிக்களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைப் பயன்படுத்தி பார்வைப் பரிசோதனையை மேற்கொண்டு பொருள் விபரக் குறிப்பிற்கு | நிரந்தரமாகத் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்க பொறுகைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். திட்டமிட்டவாறு தரப்பரிசோதனை அறிக்கைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் சிபாரிசுகள் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | Cloth Rib- Stop Black CR/SF Pattern புடவைகளின் 25,000 மீற்றர்களை கொள்வனவு செய்யும் போது தரப்பரிசோதனை அறிக்கைக்காக ஒரு கேள்விதாரரிடமிருந்து கட்டணம் அறவிட்டு திட்டமிட்ட பரிசோதனையும் மேற்கொள்ளப்படாது வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். | மிகவும் பொருத்தமாமன வகையில் கொள்வனவு செய்தல் இடம்பெற்றுள்ளது. | |
| (xi) | ரூபா 11.25 மில்லியன் செலவு செய்து உத்தியோகத்தர்களுக்கு உடம்பை வெப்பமாக்கும் ஆடைகளைத் தைப்பதற்கு 25,000 மீற்றர் Tricot புடவைகளை கொள்வனவு செய்யும் போது முன்னர் திட்டமிட்டவாறு ஆய்வுகூட அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் உறுதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைத் தெரிவிக்காது குறைந்த விலையினைச் சமர்ப்பித்த கேள்விதாரர் நிராகரிக்கப்பட்டதனால் ரூபா 6.28 மில்லியன் கூடுதல் விலைக்கு உரிய புடவைகள் கொள்வனவு செய்யப்பட்டன. | கொவிட் 19 நிலைமையின் காரணமாக ஆய்வுகூட அறிக்யைினைப் பெற்றுக்கொள்ளாது வெளிக்களப் பரீட்சிப்பு மற்றும் பார்வை பரீட்சிப்பினை மேற்கொண்டு கொள்வனவு செய்வதற்காக தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | திட்டமிட்டவாறு ஆய்வுகூட . பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையில் தீர்மானம் எடுத்தல் வேணடும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சமாதான கடமைகளுக்காக மாலி நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட 685 இராணுவ வீரர்களுக்குத் தேவையான பொருட்கள் , இராணுவ மற்றும் இராணுவமற்ற வாகனங்களும் மற்றும் உபகரணங்களையும் 2016 மற்றும் | உரிய பொருட்கள், இராணுவ மற்றும் இராணுவமற்ற வாகனங்களையும் உபகரணங்களையும் தேவைக்கிணங்க பயன்படுத்துவதற்கு | தேவைக்கேற்ப பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் தற்பொழுது |

| | | | |
|---|---|---|---|
| | 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த கொள்வனவு செய்யப்பட்ட போக்குவரத்து மற்றும் ஏனைய உபகரணங்களுக்கு மத்தியில் 1.38 மில்லியன் தொகையான வாகனங்களும் உபகரணங்களும் மற்றும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத இன்னும் வாகனமற்ற உபகரண இருப்புக்களும் விளைவற்று நாட்டின் பல்வேறு பிரதேச்ங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவு செய்யப்பட்டுள்ள இந்த இருப்புக்கள் அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்களை வழங்கும் வகையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2007 ஆம் ஆண்டின் போது மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் நில அளவையாளரால் வழங்கப்பட்ட மு.பி.மஹ 3784 ஆம் இலக்க சட்டரீதியான திட்ட வரைபடத்தின் மூலம் கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில் 14 ஹேக்டேயர் காணி குண்டசாலை பிரதேச செயலகத்தினால் 2007 ஆம் ஆண்டின் போது தரைப்படைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இக்காணி விளைவற்றுக் காணப்பட்டதனால் அதிகாரமற்ற குடியிருப்பாளர்கள் பலவந்தமாக குடியிருந்து வருகின்றார்கள் 2016 ஆம் ஆண்டின் போது நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செல்லும் போது தரைப்படையினரால் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் இந்த அதிகாரமற்ற குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது ஏனைய பொருத்தமான வழிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காணியை தீர்த்துவைப்பதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தரைப்படையின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடாந்தம் ரூபா 1.74 மில்லியன் செலவு செய்து 5.74 ஏக்கர் அளவான 39 காணித் துண்டுகளில் வீடுகள் அல்லது களஞ்சியங்கள் நிர்மாணிப்பதற்காகவும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் வருடாந்தம் மொத்தமாக ரூபா 187.37 மில்லியன் செலவு செய்து 226,160 சதுர | இக்காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையாளர்களை இனங்கண்டு மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இராணுவ தலைமையக | அரசாங்கத்தின் சொத்துக்களிலிருந்து உச்சஅளவு பயன்பாட்டைப் பெற்று செலவுகளை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடியான 39 கட்டிடங்களில் தங்குமிட வசதிகள், அலுவலகங்கள் மற்றும் களஞ்சிய வசதிகளை வழங்குவதற்காகவும் 31 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளுக்கும் கட்டிடங்ககளுக்கும் பதிலாக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஏனைய காணிகள் அல்லது கட்டிடங்களை வழங்குவதற்கு இதுவரை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திலிருந்து உத்தேச வசதிகளைப் பெற்றபின்னர் கட்டிடங்களை மீள ஒப்படைப்பதற்கு இயலுமை காணப்படுகின்றது. | |
| (ஈ) | முறைப்படியாக பொறுப்பேற்கப்படாது தரைப்படையினால் ஏனைய அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்களை உள்ளடக்கிய அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களிடமிருந்து 32 ட்ரக் வண்டிகளும் 17 அம்புலன்ஸ்களும் 11 உழவு இயந்திரங்களும், 11 கெப் வாகனங்களும், 5 ஜீப் வண்டிகளும் 4 உழவு இயந்திரங்களும் இழுவைப்பெட்டிகளும் 04 நீர் மற்றும் எரிபொருள் பவுஸர்களும் 3 பஸ்களும் ஒரு டிப்பர் வாகனமும் ஒரு கட்டளை மற்றும் பதவிநிலை வாகனமும் 8 மோட்டார் சைக்கிள்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | அரசாங்க திணைக்களங்களை உள்ளடக்கிய இன்னும் சிவில் நிறுவனங்களின் வாகனங்கள் தரைப்படைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. தரைப்படையின் நடைமுறைக்கு இணங்க நிருவாக நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்காக யுஹ இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. | உரிய சொத்துக்களை முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு அல்லது உரிய நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தரைப்படைக்குச் சொந்தமான 1,320 வாகனங்களும் தரைப்படை பயன்படுத்தி வருகின்ற 1,839 வாகனங்களும் தரைப்படைக்கு ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைத்துள்ள 42 வாகனங்களும் தொடர்பாக மீளாய்வாண்டின் போது காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் பதிவுசெய்தல் சான்றிதழ் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளின் தாமதத்தினால் காப்புறதியை பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது. | காப்புறுதி செய்யப்பட வேண்டிய வாகனங்களுக்காக துரிதமாக காப்புறுதி பெற்றுக்கொள்ளப்படு தல் வேண்டும். |
| (ஊ) | 1998 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்த ரூபா 4.33 மில்லியன் பெறுமதியான 216 வகையான உதிரிப்பாகங்களின் 1,888 விடயங்கள் பெறுமதி வெளிப்படுத்தப்படாத 37 வகையான உதிரிப்பாகங்களுக்குரிய 838 விடயங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரை பயன்பாட்டிற்கு | தொடக்க வேதைத்தளத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டினையும் வழங்குதலையும் முறையாக இனங்கண்டு கொள்வனவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்துக்கொள்ளப்படாது கொம்பனி வீதியிலுள்ள மின்சார மற்றும் இயந்தரிர பொறியியல் வேலைத்தளத்தின் களஞ்சியத்தில் காணப்பட்டன. | | |
| (எ) | பனாகொட பொறியியல் வேை ரெஜிமன்ட் களஞ்சியத்தின் ரூபா 2.09 மில்லியன் பெறுமதியான 119 கட்டிட நிர்மாணப் பொருட்களுக்குரிய 15,237 விடயங்கள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வழங்கப்படாது காணப்பட்டதனால் அவற்றின் பொருளாதார வினைத்திறன் பெரும்பாலும் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் ரூபா 2.56 மில்லியன் பெறுமதியான கட்டிட நிர்மாண உபகரணங்களின் 39 விடயங்களின் முழுமையான உத்தரவாத காலத்தினை மிகைக்கும் வகையில் வழங்கப்படாது வைத்திருக்கப்பட்டன. மேலும் ஒரு ஆண்டு மாத்திரம் உத்தரவாத காலம் உள்ள ரூபா 13.43 மில்லியன் பெறுமதியான 21 வகையான உபகரணங்களின் 185 விடயங்களது உத்தரவாத காலம் 08 மாதங்களிலிருந்து 11 மாதங்கள் வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | தற்பொழுது உரிய பொறியியல் பொருட்களின் குறித்த அளவானவை வழங்கப்பட்டுள்ளதுடன் மிகுதியான பொறியியல் பொருட்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்காக துரிதமாக வழங்குவதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | தேவைப்பாட்டினையும் வழங்குதலையும் முறையாக இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தரைப்படையின் பல்வேறு சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள ரூபா 13,233.66 மில்லியன் தொகையான 173 நட்டங்கள் சேதங்கள் மற்றும் 303 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள ரூபா 222.21 மில்லியன் நட்டங்களாக மொத்தமாக ரூபா 13,455.87 மில்லியன் மீதி காணப்பட்டதுடன் இந்த நட்டங்கள் சேதங்கள் 10 ஆண்டுகளுக்கு | உரிய மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு தேவையான மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய நட்டங்கள் சேதங்களை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பட்ட 88 சம்பவங்கள் தொடர்பான ரூபா 197.22 மில்லியன் தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 166 சம்பவங்கள் தொடர்பன ரூபா 12,933.89 மில்லியன் தொகையும் காணப்பட்டதுடன் இந்த மீதிகளை அறவீடு செய்தல் பதிவழித்தல் அல்லது தாமதத் தன்மையில் காணப்பட்டது. | | |
| (ஆ) | தரைப்படையினால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் தரைப்படையின் 69 வகையான நிலையான சொத்துக்களுக்கு ஏற்பட்ட ரூபா 733.76 மில்லியன் நட்டங்கள் ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றுக்கு இந்த பதிவழிக்கப்பட்ட பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது இது சரிசெய்யப்பட்டு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பதிவழித்த பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | 252 சம்பவங்கள் தொடர்பான மொத்தமாக ரூபா 846.46 மில்லியன் கடந்த ஆண்டின் இறுதி மீதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏடுகளிலிருந்து பதிவழித்தல் கூற்றின் ஆரம்ப மீதியாக அறிக்கையிடப்பட்டிருக்காததுடன் கடந்த ஆண்டின் இறுதி மீதியாக காட்டப்பட்டிருக்காத நட்டங்கள் சேதங்களின் 106 சம்பவங்கள் தொடர்பான ரூபா 252.18 மில்லியன் மீதிகள் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாக காட்டப்பட்டிருந்தது. மேலும் கடந்த ஆண்டிற்கான நட்டங்கள் சேதங்களின் 17 சம்பவங்கள் தொடர்பாக ரூபா 29.43 மில்லியன் அதிகமாகவும் 05 சம்பவங்கள் தொடர்பாக ரூபா 11.15 மில்லியன் குறைத்தும் மீளாய்வாண்டில் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடந்த ஆண்டிற்கான இறுதி மீதிகளை சரியாக மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றின் மூலம் 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை தரைப்படையின் 52 வகையான சொத்துக்களுக்கு ஏற்பட்ட மொத்தமாக ரூபா 24.02 மில்லியன் நட்டம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்நட்டங்களை 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நட்டங்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | 1990 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரை தரைப்படையின் வாகனங்களுக்கு ஏற்பட்ட 306 வாகன விபத்துக்கள் சம்ந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்து முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த முடிவுறுத்தப்படாத கோவைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவையான நடவடிக்கை எடுத்து முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தரைப்படைக்கு வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 07 தனியார் நிறுவனங்களுக்கு 2012 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 137.15 மில்லியன் பணம் அறவிடப்பட வேண்டுமென உரிய நிறுவனங்களினால் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அப்பெறுமதிக்குரிய வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக அந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என தரைப்படையினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | இப்பெறுமதிக்குரிய எந்த விலைப்பட்டியலும் தரைப்படைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த முரண்பாட்டு நிலைமைக்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து பார்த்து துரிதமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| .கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தியத்தலாவ, பனாகொட மற்றும் அநுராதபுரம் தரைப்படை முகாம்களின் களஞ்சியத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5.39 மில்லியன் பெறுமதியான 218 கவர் அவுடஸ் 80 வாகன பெற்றரிகள், பல்வேறு அலுவலக மற்றும் மின்சார உபகரணங்கள் உத்தரவாத காலத்திற்குள் | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய இருப்புக்களை வழங்குவதற்கும் ஏனைய இருப்புக்களை பொருத்தமற்றதாக்குவத | தேவைப்பாட்டினை முறையாக இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமையால் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலைமைக்கு மாறிதனால் கைதவிர்ப்புச் செய்ய வேண்டியிருந்தது. | ற்கும் எடுக்கப்படும் | நடவடிக்கை |

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| வேரஹெர தரைப்படை வைத்தியசாலையில் அமைந்துள்ள மருந்து களஞ்சிய கட்டிடம் சுகாதார அமைச்சு மற்றும் மருந்துகளை ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சர்வதேச நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்காக 14,450 சதுர அடியான களஞ்சிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தும் அத்தேவைப்பாடு இதுவரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய நிர்மாணத்திற்காக 2024 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாட்டினை வேண்டிக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது . | திட்டமிட்டவாறு உரிய கட்டிடத்தினை நிர்மாணித்து பாதுகாப்பாக மருந்துப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| தரைப்படையின் பதவியணியில் 32,599 வெற்றிடங்கள் மற்றும் சிவில் பதவியணியினர் சிரேஷ்ட மட்டத்தில் 03 வெற்றிடங்கள், மூன்றாம் மற்றும் இரண்டாம் மட்டத்தில் 60 வெற்றிடங்களையும் உள்ளடக்கி ஒட்டுமொத்த வெற்றிடங்கள் 34,770 ஆகக் காணப்பட்டது. | அரசாங்க சேவைக்கு ஆட்சேர்த்தல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளத னால் அதற்கு இணைவாக தரைப்படை நடவடிக்கை எடுத்துள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உள்ளபடியான பதவியணிக்கு பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |